1995 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

98—

தேனீ வளர்ப்பு-பெருக்க மையத்திற்கு நிதி உதவி

**38167—திரு. கா. பூ. முனுசாமி:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனீ வளர்ப்பு-பெருக்க மையத்தின் ஆக்கப்பூர்வமான உதவியை அரசு மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிதி உதவி ஆராய்ச்சி வளர்ச்சி பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேனீ வளர்ப்புக்கு அரசு ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலமாக நிதியுதவி செய்து வருகிறது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மாநில அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதையும், அதே நேரத்தில் மலைவாழ் மக்கள் நலம் பெறுகின்ற வகையிலே இந்தத் திட்டம் இருக்கின்ற காரணத்தினால், மைய அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கதர் ஆணைக் குழு முழுமையாக இந்தத் திட்டத்திற்கு நிதியுதவி செய்கிறது. இருந்தாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மாநில அரசினுடைய பங்கு மிக அதிக அளவில் இதிலே செய்யப்பட்டு இந்தத் திட்டம் மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1995 நவம்பர் 10

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மலையும், மலையைச் சார்ந்த பகுதியாக இருக்கிறது. பல இயற்கை வளங்களைக் கொண்ட மாவட்டமாகவும் இருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு பின்தங்கிய மாவட்டமாக இருந்த அந்த மாவட்டம் எல்லா துறைகளிலேயும், இன்று இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற முன்னணி மாவட்டங்களுக்கு இணையாக போட்டிப் போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிற மாவட்டமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மலைவாழ் மக்கள் அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தினால் இதுபோன்ற ஆராய்ச்சி மையத்தை தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல்லில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆராய்ச்சிகளுக்கு என தனியாக ஒரு மையம் இல்லை. இருந்தாலும், கடலூரில் இருக்கின்ற தேனீ வளர்ப்பு ஆராய்ச்சி மையத்திலே ஒரு சிறிய ஆராய்ச்சிக் கூடம் வைக்கப்பட்டு தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலே ஆராய்ச்சி மையம் அமைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஜவ்வாதுமலை போன்ற பகுதியிலே மிக நல்லமுறையிலே இந்தத் தொழில் நடந்து வருகிறது. ஆகவே, தர்மபுரி, வடாற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் ஆராய்ச்சி மையங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

99—

வெறி நோய்த் தடுப்புத் திட்டம்

*17556—**டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 நவம்பர் 10]

(அ) சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு வெறிநோய் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டத்தினைச் செயற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் நகராட்சிப் பகுதியில் வெறிநோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, சேலம் மாவட்டத்தில் வெறிநோய் தடுப்புப் பணி முழுமையாக செயல்படுத்தப்பட்டு, அதாவது 100 பர்சென்ட் கவரேஜ் கொடுத்து, குறித்த காலத்திற்குள் வெறிநோய் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு நிலைமையை உருவாக்க நமது அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனைப்படி சேலம் நகராட்சியில் இந்த வெறிநோய்த்தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசுக்கு ஆகும் செலவு மொத்தம் ரூபாய் மூன்று லட்சம். இதில், தொடரும் செலவினமாக இரண்டரை லட்சமும், தொடராச் செலவினமாக ரூபாய் ஐம்பது ஆயிரமும் செலவு ஆகும். இதற்கான ஆய்வு நடத்தப்பட்டு இதனை முதன்முதலாக சேலம் நகராட்சியில் செயல்படுத்தி எதிர்காலத்தில் பேரூராட்சி மற்றும் இதர இடங்களில் எடுத்துச் செயல்படுத்தவும் அரசு ஆய்வு செய்து வருகிறது. இதற்கான செயற்குறிப்பு நிதித்துறைக்கு அனுப்பப்பட்டு விரைவில் இது முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறிநோய் என்பது மிகவும் கொடிய நோய். It is a viral disease. மூளை, நரம்பு மண்டலம் ஆகியவற்றை பாதித்து நோய் கண்ட 10 நாட்களுக்குள் இறப்பு உறுதி என்ற நிலையில் prevention is better than cure என்பதைக் கருத்தில் கொண்டு கால்நடைகளுக்கு மட்டுமல்லாமல் மனித உடலுக்கும்